புலி ஒரு காலமும் பணி.யாது
எந்த படை வந்த போதிலும் சலி.யாது

இசை

புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது
திசை மாறிடுமோ ஒளிரும் சூரியன்
அலையா.கிடுமோ கிடையாது
எங்கள் நிலை மாறிடுமோ நடவாது
எங்கள் நிலை மாறிடுமோ நடவாது
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது

இசை

எல்லை தாண்டிவந்து உருவாகும் பகை
எம்மை ஆளவென்று சதிபோடும்
எல்லை தாண்டிவந்து உருவாகும் பகை
எம்மை ஆளவென்று சதிபோடும்
முள்ளை மலரென்று கதைபேசும் சில
மந்திகள் கொடி காவும்
கொட்டிலுக்கு கூரையில்லை கொண்டுவந்ததேதுமில்லை
காட்டுதற்கு ஆடையில்லை மானமின்னும் சாகவில்லை
பட்டினிக்கு வட்டியில்லை வா வா ...
இனி புத்தனின்று வாழ்வதில்லை வா வா
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது

இசை

பகை வந்து பிடித்தது சுடுகாடு அதை
பறிப்போம் தி.ட.மாய் நடைபோடு
பகை வந்து பிடித்தது சுடுகாடு அதை
பறிப்போம் தி.ட.மாய் நடைபோடு
மறுபடி செய்வோம் பூக்காடு வெள்ளி
மலர்ந்திடும் கூத்தாடு
நாம் பிறந்த ஊருமில்லை நட்டு வந்த வேருமில்லை
ஆதரவுக்காருமில்லை ஆறுதற்கு நேரமில்லை
ஓருயிர்தான் யா.வருக்கும் வா வா
இனி சாவரேனும் ஓய்வதில்லை வா வா ...
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது

இசை

கண்ணில் பாய்கிறது நீரோட்டம் தமிழ்
களத்தில்  கயவரது  தேரோட்டம்
கண்ணில் பாய்கிறது நீரோட்டம் தமிழ்
களத்தில்  கயவரது  தேரோட்டம்
மண்ணில் நடத்துவோம் போராட்டம் புலி
மறுபடி கொடியேற்றும்
பள்ளியில்லை தேர்வுமில்லை சொல்லியழ  யாருமில்லை
உள்ளமன்றி மிச்சம் இல்லை உயிர்துறக்க அச்சம்மில்லை
போரெடுத்து வெல்.வ.தற்கு  வா வா
எங்கள் ஊர்பிடித்து செல்வதற்கு வா வா
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது
திசை மாறிடுமோ ஒளிரும் சூரியன்
அலையா.கிடுமோ கிடையாது
எங்கள் நிலை மாறிடுமோ நடவாது
எங்கள் நிலை மாறிடுமோ நடவாது
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது